RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-29 | 29 ஜனவரி | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## உ.பி.யில் மத நிகழ்வில் தற்காலிக மேடை இடிந்து விழுந்து 5 பேர் பலி; பலர் காயம்

பாக்பத், ஜன.29

உத்தரப் பிரதேசத்தின் பாக்பத்தில் ஜைன சமயத்தின் முதல் தீர்த்தங்கரரான பகவான் ஆதிநாத்தின் 'நிர்வாண லட்டு பர்வ்' விழாவில் தற்காலிக மேடை இடிந்து விழுந்து 5 பேர் உயிரிழந்தனர். ஜைன மத சீடர்கள், காவலர்கள் உட்பட பலர் காயமடைந்தனர்.



பாக்பத்தில் செவ்வாய்க் கிழமை நடந்த இந்த சம்பவத்தால் அங்கு குழப்பமும், பதற்றமும் ஏற்பட்டது. சம்பவத் தில் பல பக்தர்கள் காயமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. தற்காலிக மேடை இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத், விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக தேவையான நிவாரண உதவிகளை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய பிரார்த்தனை செய்வதாக தெரிவித்தார்.

பாக்பத் மாவட்ட ஆட்சித் தலைவர் அஸ்மிதா லால் கூறுகையில், "பரவுத்தில் ஜைன மதத்தினரின் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக மர மேடை இடிந்து விழுந்து 40 பேர் காயமடைந்தனர். அவர்களில் மருத்துவ சிகிச்சைக்கு பின்பு 20 பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். 20 சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்" என்று தெரிவித்தார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்பித் விஜய்வர்கியா கூறுகையில், "பரவுத்தில் ஜைன சமூகத்தின் லட்டு மோட்சவ் விழாவில் ஒரு மக்கான் (தற்காலிக மேடை) இடிந்து விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வருகின்றன. 23 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்." என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், யோகி ஆதித்யநாத் அரசை சாடியுள்ளார். அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "பாஜக யோகி அரசு மதத்தின் பெயரால் ஒரு காட்சியை உருவாக்குகிறது, ஆனால் மக்களுக்கு எந்த பாதுகாப்பும் வசதிகளும் கிடைக்கவில்லை.

கூட்டத்தை கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள், வருகை தரும் பக்தர்களுக்கு பாது காப்பு மற்றும் வசதிகள் செய்யப்படவில்லை அல்லது அதற்கான முன்னேற்பாடுகள் கூட செய்யப்படவில்லை. அதனால் தான் மத நிகழ்வுகளில் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. உயிர்கள் பலியாகின்றன.

ஊழலில் மட்டுமே ஈடுபட்டுள்ள யோகி, பாஜக அரசு இதனையெல்லாம் ஏன் பார்க்க மறுக்கிறது?. அவர்கள் வெட்கமின்றி ஒப்பாரி வைத்து கூச்சலிடுகிறார்கள், ஆனால் அவர்களின் முயற்சி வீணாகவே முடிகிறது." என்று தெரிவித்துள்ளார்.

**திருப்பதி கூட்ட நெரிசல் வழக்கு**: முன்னதாக இந்த மாதத்தின் தொடக்கத்தில் இந்தியாவில் மிகவும் பரபரப்பாக இருக்கும், பணக்கார கோயிலான ஸ்ரீவெங்கடேஸ்வர சுவாமி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சுமார் ஆறு பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர். கோயிலில் இலவச தரிசனத்துக்கான அனுமதிச் சீட்டு வாங்க ஆயிரக்கணக்கான பேர் ஒன்று கூடியதால் இந்த கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

## காரைக்கால், தமிழக மீனவர்கள் 13 பேர் இலங்கை கடற்படையினரால் கைது

காரைக்கால், ஜன.29

காரைக்காலில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற காரைக்கால், தமிழக மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று (ஜன.27) இரவு கைது செய்தனர்.



காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல்மேடு மீனவ கிராமத்தை சேர்ந்த ஆனந்தவேல் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகில் அதே ஊரைச் சேர்ந்த மாணிக்கவேல், தினேஷ், காரத்திகேசன், செந்தமிழ், பட்டினச்சேரியை சேர்ந்த மைவிழிநாதன், வெற்றிவேல், தமிழகத்தின் மயிலாடுதுறை மாவட்டம் சந்திரப்பாடியை சேர்ந்த நவெந்து, வானகிரியை சேர்ந்த ராஜேந்திரன், ராம்கி, நாகை மாவட்டம் நம்பியார் நகர் சசிகுமார், நந்தகுமார், பாபு, குமரன் ஆகிய 13 பேர் கடந்த 26ம் தேதி காலை 10 மணியளவில் காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். நேற்று இரவு 9.30 மணியளவில் கோடியக்கரைக்கு அருகே இந்திய கடல் எல்லைக் குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் 13 மீனவர்களும் விசைப்படகுடன் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டபோது படகிலிருந்து தவறி கடலில் விழுந்த இரண்டு மீனவர்கள் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

அண்மைக் காலமாக தொடர்ச்சியாக காரைக்கால், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவது மீனவர்களிடையே அச்சத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், இதுவரை இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என காரைக்கால் மாவட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 2026ம் ஆண்டு ஆடுகளத்தில் சந்திப்போம் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் சவால்

கரூர், ஜன.29

கரூர் மாவட்ட அதிமுக மாணவரணி சார்பில் மொழிப் போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் லைட்ஹவுஸ் முனை பகுதியில் நேற்று நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேசியது: ஆண்டாங்கோவில் ஊராட்சியை கரூர் மாநகராட்சியுடன் இணைக்கக்கூடாது என்ற தீர்மானம் வேறு ஒரு தீர்மானத்தின் மீது ஒட்டப்பப்பட்டது எனக்கூறி முன்னாள் ஊராட்சி தலைவர் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.




ஒரு வார்டு உறுப்பினரை தவிர அனைத்து வார்டு உறுப்பினர்கள் சம்மதத்துடன் தீர் மானம் போடப்பட்டது. ஊராட்சி செயலாளர் ஒட்டியதை மறைத்து வழக்கு போட்டுள்ளனர். ஜன. 26ம் தேதி கிராம சபைக்கூட்டத்தில் 500 பேருக்கு மேல் சென்று ஆண்டாங்கோவில் ஊராட்சியை கரூர் மாநகராட்சியுடன் இணைக்கக்கூடாது என மனு அளித்தோம். அதனை குப்பையில் போட்டிருப்பார்கள். ஜனநாயக முறையில் நமது எதிர்ப்பை தெரிவித்தோம்.

மாநகராட்சியுடன் இணைத்தால் வீட்டு வரி உயர்வு, குப்பை வரி, காலிமனை வரி, புதை சாக்கடை வரி என ஏராளமான வரிகள் விதிக்கப்படும். எதற்கெடுத்தாலும் வழக்கு போட்டு வருகின்றனர். எத் தனை பொய் வழக்குகள் வேண்டுமானலும் போட்டுக் கொள்ளுங்கள். அனைத்தும் அப்படியே திரும்ப வரும். அரசு அதிகாரிகள் நேர்மையோடு செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் செயல்பட வைப்போம்.

2026ம் ஆண்டில் ஆடுகளம் தயாராக உள்ளது. வாருங்கள் மோதுவோம். துரோகிகள் வெளியே சென்றுவிட்டனர். தற்போது உண்மையான அதிமுகவினர் தான் உள் ளோம். கரூர் மாவட்டத்தில் 4 தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெறுவோம் என சபதம் ஏற்போம். இவ்வாறு அவர் பேசினார்.

## "திராவிடத்தால் உருவானதுதான் இன்றைய நவீன தமிழ்நாடு" முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

விழுப்புரம், ஜன.29

எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் ஆட்சி. திராவிடம்தான் தமிழ்நாடு என்ற பெயரையும், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தையும் பெற்று கொடுத்தது. இன்றைய நவீன தமிழ்நாடு திராவிடத்தால் உருவானதுதான், என்று விழுப்புரம் அருகே வழுதரெட்டியில் நடந்த 21 சமூக நீதிப் போராளிகளுக்கான மணிமண்டபம், ஏ.கோவிந்தசாமியின் நினைவரங்க திறப்பு விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.




இடஒதுக்கீடு போராட்டத்தில் உயிர்நீத்த 21 சமூக நீதிப் போராளிகளை போற்றும் வகையில், விழுப்புரம் அருகே வழுதரெட்டியில் ரூ.5.70 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தையும், ரூ.4 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கத்தை இன்று (ஜன.28) முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பின்னர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: என் வாழ்நாள் முழுக்க எண்ணி பெருமைப்படும் வகையில் ஏ.கோவிந்தசாமியின் நினைவு மண்டபம் திறந்து வைக்கும் நிகழ்வு அமைந்துள்ளது. 2019 விக்கிரவாண்டி இடைத் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது. மாற்றார்கூட குறை சொல்ல முடியாதவர் ஏ. கோவிந்தசாமி என்று பெரியார் தெரிவித்தார்.

21 சமூகநீதி போராளிகள் 1987ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அதன்பின் ஆட்சிக்கு வந்த திமுக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை உருவாக்கி 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மேலும் உயிர் தியாகம் செய்த குடும்பத்தாருக்கு மாதந்தோறும் ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. ராமசாமி படையாச்சிக்கு சென்னையில் சிலை அமைக்கப்பட்டது.

வன்னியர் பொது சொத்து வாரியம் அமைத்தது திமுக ஆட்சியில்தான். தற்போது சமூகநீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. திராவிட இயக்கம் தோன்றியதே சமூகநீதியை நிலைநாட்டுவதற்காகத்தான். நேற்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாவட்டத்துக்கான தேவைகளை கண்டறியப்பட்டது.

அதன்படி நந்தன்கால்வாய் ரூ.304 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு, ரூ.84 கோடியில் தளவானூர் தடுப்பணை, காணையில் ரூ.35 கோடி மதிப்பில் கூட்டுக்குடிநீர் திட்டம், திருவாமாத்தூரில் ரூ.4 கோடி மதிப்பில் திருமண மண்டபம், விழுப்புரம் பழைய நகராட்சி அலுவலகம் ரூ.2 கோடி மதிப்பில் டவுன் ஹால் அமைக்கப்படும் என்பன உள்ளிட்ட திட்டங்களை அறிவிக்கிறேன். என்னை பொறுத்தவரை நம்பர் ஒன் முதல்வர் என்பதைவிட நம்பர் ஒன் தமிழ்நாடு என்பதே இலக்கு.

எல்லோருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் ஆட்சி. திராவிடம்தான் தமிழ்நாடு என்ற பெயரையும், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்று கொடுத்தது. இன்றைய நவீன தமிழ்நாடு திராவிடத்தால் உருவானதுதான். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

கல்லூரி மாணவ, மாணவிகள்... முன்னதாக திங்கள் கிழமை திண்டிவனத்தில் நடைபெற்ற ரோட் ஷோவில் சுமார் 9 ஆயிரம் பேர் மட்டுமே கூடியதால் முதல்வர் அதிருப்தி அடைந்ததால் இன்று கூட்டத்தை காட்டுவதற்கு தனியார் கல்லூரி நிர்வாகத்திடம் பேசி மாணவ, மாணவியர்களை முதல்வர் விழா மேடைக்கு வரும் வழி முழுவதும் நிறுத்தியதாக கூறப்படுகிறது.

## நயன்தாரா ஆவணப்படம்: தனுஷ் வழக்கை நிராகரிக்க கோரிய நெட்ஃப்ளிக்ஸ் மனு தள்ளுபடி

சென்னை, ஜன.29

நடிகை நயன்தாராவின் திருமண ஆவணப்படத்தில் 'நானும் ரவுடிதான்' படப்பிடிப்பு காட்சிகளை பயன்படுத்தியதற்காக ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு நடிகர் தனுஷின் ஒண்டர்பார் நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை நிராகரிக்க கோரி நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் தரப்பில் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நடிகை நயன்தாரா திருமண ஆவணப்படத்தில், 'நானும் ரவுடிதான்' படப்பிடிப்பு காட்சிகளை பயன்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு, நடிகர் தனுஷின் ஒண்டர்பார் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. நடிகை நயன்தாரா, இயக்குநர் விக்னேஷ்சிவன் மற்றும் தங்களது நிறுவனத்துக்கு எதிராக தொடரப்பட்டுள்ள இந்த வழக்கை ஆரம்ப கட்டத்திலேயே நிராகரிக்க கோரி நெட்ஃப்ளிக்ஸ் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நெட்ஃப்ளிக்ஸ் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பார்த்தசாரதி, "திரைப்படத்தில் இடம்பெறாத படப்பிடிப்பு காட்சிகளுக்கு ஒண்டர்பார் நிறுவனம் பதிப்புரிமை கோர முடியாது. படப்பிடிப்பு காட்சிகள் 2020ம் ஆண்டே வெளியானது. ஆனால், தாமதமாக 2024ம் ஆண்டு தான் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை காப்புரிமை சட்டத்தின் கீழ் தொடர முடியாது. இந்தக் காட்சிகள் கடந்த 2020ம் ஆண்டு முதலே பொதுத்தளத்தில் உள்ளது. மூன்றாவது நபர் தான் இந்த காட்சிகளை எடுத்ததார். இந்த ஆவணப்படம் தொடர்பாக கடந்த 2024ம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி அன்று தனுஷிடமிருந்து நெட்ஃப்ளிக்ஸ்க்கு வழக்கறிஞர் நோட்டீஸ் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. ஆவணப்படம் வெளியான ஒரு வாரம் கழித்து தான் தனுஷ் தரப்பில் வழக்கு தொடரப்பட்டது. எனவே, இந்த வழக்கை ஆரம்ப கட்டத்திலேயே தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று வாதிட்டார்.

இதற்கு தனுஷின் ஒண்டர்பார் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், "நானும் ரவுடிதான் படத்தில் பயன்படுத்தப்பட்ட காட்சிகள் அனைத்தும் மனுதாரருக்கு சொந்தம். ஆவணப்படத்தின் ட்ரெய்லர் வெளியிட்ட போது, 3 வினாடி காட்சிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது தெரிய வந்தது. உடனடியாக அந்த காட்சிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கூறப்பட்டது. அதற்கு நயன்தாரா தரப்பில், பதிப்புரிமைக்காக நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று பொதுவெளியில் கடிதம் எழுதினார்.

படத்தின் ஒப்பந்தம் கையெழுத்தான போது ஒண்டர்பார் நிறுவன அலுவலகம் வீனஸ் காலனியில் இருந்தது. அதனால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். படத்தில் பயன்படுத்தப்பட்ட அந்த காட்சிகள் படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்டவை. நயன்தாரா ஒப்பந்தம் செய்யும் போது அவர் செய்துள்ள சிகை அலங்காரம், உடை அலங்காரத்தில் இருந்து அனைத்தும் நிறுவனத்துக்கே சொந்தமானது. இதையெல்லாம் ஒப்புக்கொண்டு தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

படம் தொடர்பாக அனைத்து காட்சிகளும் ஒண்டர்பார் நிறுவனத்துக்கு சொந்தமானது. எனவே, இது காப்புரிமை சட்டத்துக்கு பொருந்தும். படத்தின் படப்பிடிப்பின் பெரும்பாலும் சென்னையில் தான் நடைபெற்றது. அதேபோல், ட்ரெய்லர் மற்றும் படம் சென்னையில் தான் வெளியிடப்பட்டது" என்று வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கில் இன்று உத்தரவு பிறப்பித்த நீதிபதி அப்துல் குத்தூஸ், ஒண்டர்பார் நிறுவனத்தின் வழக்கை நிராகரிக்க வேண்டும் என நெட்ஃப்ளிக்ஸ் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும், ஒண்டர்பார் நிறுவனத்தின் தரப்பில் தனுஷ் தாக்கல் செய்த உரிமையியல் வழக்கின் விசாரணையை பிப்ரவரி 5ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

## ஐஎஸ்ஐஎஸ்க்கு ஆள்சேர்ப்பு விவகாரம் தமிழகத்தில் 16 இடங்களில் என்ஐஏ சோதனை

சென்னை, ஜன.29

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பவர்களை கண்டறியும் நோக்கில் தமிழகத்தில் 16 இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு (என்ஐஏ) இன்று (ஜன.28) சோதனை நடத்தியது. குறிப்பிட்ட உள்ளீடுகளின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பவர்கள், அந்த அமைப்புக்கு ஆட்களைச் சேர்ப்பவர்கள் ஆகியோரை கண்டறிவது மற்றும் அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பது ஆகியவற்றில் என்ஐஏ தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் சித்தாந்தத்தை ஊக்குவிப்பது மற்றும் ஆட்களை சேர்ப்பது ஆகியவற்றில் ஈடுபடும் சந்தேக நபர்களின் மறைவிடங்களில் என்ஐஏ இன்று காலை முதல் சோதனைகளை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 16 இடங்களில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சந்தேக நபர்கள் தொடர்பாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த சோதனைகள், இது தொடர்பான ஆதாரங்களை கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டவை என நடவடிக்கைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஐஎஸ்ஐஎஸ் ஆதரவாளர்கள் மீது கடந்த ஆண்டு வழக்குப்பதிவு செய்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில், அவர்களின் பங்கு வெளிப்பட்டது.

கடந்த ஆண்டு அக்டோபர் 21ம் தேதி, தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு வழக்கில், ஐஎஸ்ஐஎஸ் ஆல் ஈர்க்கப்பட்ட மூன்று குற்றவாளிகளை என்ஐஏ கைது செய்தது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மூன்று குற்றவாளிகளும் பயங்கரவாதச் செயலுக்கு நிதி வழங்க கூட்டுச் சேர்ந்தது தெரியவந்தது.



மதுரை மாவட்ட காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் (ஜன 26) அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் சிறந்த அரசு ஊழியர்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா நற்சான்றிதழ் வழங்கினார். அவ்வகையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத்துறை ஓட்டுனர் ஆர்.வெங்கடேஸ்வரன் பணியில் எவ்விதமான புகார் அற்ற சிறந்த பணியாளர் என்ற விருது மற்றும் நற்சான்றிதழ் மாவட்ட ஆட்சியரிடம் பெற்றார்.

# வேங்கடமங்கலம் ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்

வேங்கடமங்கலம் ஜன.29



செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், வேங்கடமங்கலம் ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் கல்யாணி இரவி ஊராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி குடியரசு தினத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

தொடர்ந்து வேங்கடமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர் வி.வளர்மதி மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பட்டியல் விபரங்களை ஊராட்சி மக்களிடம் படித்துகாண்பித்த பிறகு மீண்டும் பொது மக்களின் கோரிக்கைகளின் குறைகளையும் கேட்டறிந்து சிறப்பான முறையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், ஊராட்சி மக்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரியில் குட்கா விற்பனை செய்த இரண்டுபேர் கைது - 63 கிலோ குட்கா பறிமுதல்

கன்னியாகுமரி ஜன29




கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்களுக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கடுமையான தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக, ஆரல்வாய்மொழி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தோவாளை பகுதியில் உள்ள குடோனில் விற்பனைக்காக குட்கா வைத்திருப்பதாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை மேற்கொண்டதில் தேவசகாயம் மவுண்ட் பகுதியை சேர்ந்த அந்தோணி முத்து ஜார்ஜ் என்பவரின் மகன் சகாய அன்டோனியோ லிபின்(35), காட்டுபுதுர் பகுதியை சேர்ந்த ஜேக்கப் என்பவரின் மகன் தணேஷ் காந்தி(35), ஆகியோரிடமிருந்து 63 கிலோ எடை கொண்ட அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்து இரண்டு பேரையும் கைது செய்தனர்.

மேலும் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கஞ்சா, குட்கா, புகையிலை போன்ற போதை பொருட்கள் விற்பனை செய்யும் குற்றவாளிகள் அதிரடியாக கைது செய்து வருவது குறிப்பிடத்தக்கது.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள இரயில்வே கேட் அருகே ரயில் வண்டிகள் வரும் பொழுது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் எதிரெதிரே வரும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளானது இதை தவிர்க்கும் வகையில் மானாமதுரை போக்குவரத்து காவல்துறை சார்பில் பேரிகேட் அமைக்கப்பட்டு இரு வழி பாதையாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் போக்குவரத்து நெரிசல் இன்றி எளிதில் கடந்து செல்கின்றனர்.



சிவகங்கை நகராட்சி தனியார் திருமண மண்டபத்தில் தமிழக வெற்றிக் கழகம் மாவட்டத் தலைவர் முத்து பாரதி தலைமையில் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி தமிழக முன்னேற்றக் கழகத்தில் இணையும் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.இதில் தாய் தமிழர் கட்சியில் மாவட்ட செயலாளராக பயணித்த மலைச்சாமி தமிழக வெற்றிக் கழகத்தில் 30ற்கும் மேற்பட்டவர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.உடன் மாவட்டச் செயலாளர் காளீஸ்வரன், மாவட்ட தொண்டரணி தலைவர் சஞ்சய், மானாமதுரை ஒன்றிய தலைவர் சரண்ராஜ், செயலாளர் கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் 246 தபால் வாக்குகள் பதிவு

ஈரோடு, ஜன.29



ஈரோடு கிழக்கு தொகுதியில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என மொத்தம் 246 பேர் தபால் வாக்கு அளித்துள்ளனர். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாத 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 256 பேர் வீடுகளில் இருந்து தபால்வாக்களிக்க 12 டி விண்ணப்பத்தை அளித்து இருந்தனர்.

இவர்களின் வீடுகளுக்கு சென்று தபால் வாக்கு பதிவு செய்ய 4 குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவினர் கடந்த 23ம் தேதி தொடங்கி 24, 25ம் தேதிகளில் தபால் வாக்குகளை பதிவு செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாக, தபால் வாக்குகள் பதிவு செய்யும் பணி இறுதிநாளான நேற்று மாலை நிறைவடைந்தது.

இதில், வீட்டில் இருந்தவாறே தபால் வாக்கு செலுத்த ஒப்புதல் அளித்து இருந்த 256 பேரில், 85 வயதுக்கு மேற்பட்ட 6 நபர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும், ஒரு வாக்காளர் இடமாறுதல் ஆனதாலும், 3 வாக்காளர்கள் மரணமடைந்ததாலும், மொத் தம் 10 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. தபால் வாக்குப்பதிவு முடிவில், 85 வயதிற்கு மேற்பட்ட 199 பேர், 47 மாற்றுத்திறனாளிகள் என 246 வாக்காளர்கள் வாக்கு செலுத்தியுள்ளனர்.

புதிய அடையாள அட்டை: ஈரோடு மாவட்டத்தில் உள்ள சட்டப்பேரவை தொகுதி வாரியாக, கடந்த 6ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி, மாவட்டத்தில் உள்ள 8 சட்டப் பேரவை தொகுதிகளில், 19 லட்சத்து 77 ஆயிரத்து 419 வாக்காளர்கள் உள்ளனர். இதில், புதியதாக 35 ஆயிரத்து 855 பேர் வாக்காளர்களாக சேர்க்கப்பட்டனர். மாவட்ட அளவில் புதிய வாக்காளர்கள் மற்றும் அடையாள அட்டையில் திருத்தம் கோரி விண்ணப்பித்த 49 ஆயிரத்து 295 வாக்காளர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

இதில் முதல்கட்டமாக 19 ஆயிரத்து 172 பேருக்கு புதிய அடையாள அட்டை தபால் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதியில் மட்டும் புதியதாக இணைந்த, புதிய வாக்காளர்கள் மற்றும் ஏற்கெனவே அடையாள அட்டை வைத்திருந்து, திருத்தம் மேற்கொண்டவர்கள் என 1,500 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ளவர்களுக்கு படிப்படியாக அடையாள அட்டை அனுப்பி வைக்கப்படும் என தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

**வாக்களிக்க வாகன வசதி:** தனிடையே ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வாக்குப்பதிவின் போது, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள், வாக்குச்சாவடிக்குச் சென்று தங்களது வாக்கினை செலுத்த தேர்தல் ஆணையம் சார்பில் வாகன வசதி செய்யப்பட உள்ளது. வாகன வசதி வேண்டுவோர், 04241950மற்றும் 0424 - 2267674, 2267675, 2267679, 96004 79643 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜகோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

# திருவாடானையில் நடந்த தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மரக்கன்றுகள் வழங்கல்

திருவாடானை.ஜன29



இளம் தலைமுறைக்கு இயற்கையை பேணி காக்கும் வகையில் திருவாடானையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற அகில இந்திய பெருந்தலைவர் காமராஜர் மக்கள் நல அறக்கட்டளையின் நிர்வாகி இல்ல காதணி விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறக்கட்டளை சார்பில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நினைவை போற்றும் வகையில் மரக்கன்று வழங்கும் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா மாஞ்சூர் கிராமத்தை சேர்ந்த அகில இந்திய பெருந்தலைவர் காமராஜர் மக்கள் நல அறக்கட்டளை நிர்வாகி கரிகாலன் மலர் இல்ல காதணி விழாவில் விழா செல்வன் சபரி பாண்டியன் (எ)அகிலனை வாழ்த்த கோவை, சென்னை, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, ஈரோடு, உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வருகை தந்த அறக்கட்டளை நிர்வாகிகள் அறக்கட்டளையின் நிறுவன தலைவர் செல்லத்துரை ஆணைக்கினங்க பொதுச்செயலாளர் குமார் ஆலோசனைப்படி, தமிழ்நாடு மாநில தலைவர் காளிதாஸ் வழிகாட்டுதலின் படி மாநில தொழில் நுட்ப தலைவர் பெரிய சாமி மாநில செயலாளர் பாண்டி, கொள்கை பரப்பு செயலாளர் பிரஜின் பாண்டியன், சிவகங்கை மாவட்ட அவை தலைவர் ஐயப்பன், இராமநாதபுரம் மாவட்ட தலைவர் கண்ணன் சிவகங்கை மாவட்ட தலைவர் தினேஷ் இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் வினோத் தலைமையில் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் இராமநாதபுரம் மாவட்ட பொறுப்பாளர் காட்டுராஜா மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் காளிதாஸ் தேவகோட்டை ஒன்றிய செயலாளர் பூமி, மும்பை மாநகர பொறுப்பாளர் தினகரன், ரகுபதி மாநில மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் முன்னிலையில் விழாவில் கலந்து கொண்ட சுற்று வட்டார பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் இளம் தலைமுறைக்கு இயற்கையை பேணி காக்கவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வை உணர்த்தும் வகையில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நினைவை போற்றும் விதமாக அனைவருக்கும் தென்னை மா, பலா, ஆலமரம், அரசமரம், புங்கம் உள்ளிட்ட மரக்கன்றுகள் மற்றும் துணி பைகள் வழங்கப்பட்டது .அறக்கட்டளை நிர்வாகி இல்ல காதணி விழாவில் இயற்கை வளத்தை காக்கும் வகையில் பயனுள்ள மரக்கன்றுகள் வழங்கிய நிகழ்வு அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது .

இது குறித்து நிர்வாகிகள் கூறியதாவது,

அறக்கட்டளை தொடங்கிய நாள் முதல் சாதி, மத வேறுபாடின்றி மனித நேயத்தோடு, தமிழ்நாடு, மற்றும் மும்பையில் வறுமையில் வாழும் மாணவ மாணவிகளுக்கு கல்வி கற்பதற்கான நிதி உதவி ஆதரவற்ற முதியோர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்குதல், எதிர்பாராத வகையில் விபத்தில் சிக்கியவர்களுக்கு மருத்துவ நிதி உதவி குருதி வழங்குதல் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகள் நாள்தோறும் செய்வதோடு அதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பல்வேறு மாவட்டங்களில் நகரம் மற்றும் கிராமப் புறங்களில் சாலை, குளம், ஏறி, பள்ளி கல்லூரிகளில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நினைவை போற்றி விதமாக பணை விதை நடுதல் மரக்கன்று நடுதல் என பல்வேறு சேவைகளை நிர்வாகிகள் ஒன்றிணைத்து செய்து வருகின்றோம் என்றவாறு கூறினார்.

# 1330 குறளை ஒப்பித்து அசத்திய மாணவன். பரிசு வழங்கி ஊக்கப்படுத்திய பி.டி.செல்வகுமார்

நாகர்கோயில் ஜன 29



கன்னியாகுமரி மாவட்டம் தெற்குசூரங்குடி வைகுண்டர் நற்பணி மன்றத்தின் 25 ஆம் ஆண்டு பவள விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவரும் பிரபல சினிமா இயக்குனருமான பி.டி.செல்வகுமார் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

அப்போது அந்த மேடையில் பழவிளை கிடங்கன்கரை விளை அரசு நடுநிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவன் ராமபிரதாப் ஒரு மணி நேரத்தில் 1330 திருக்குறளையும் ஒப்பித்தார். அந்த மாணவரின் திறமையை பாராட்டி அவருக்கு அந்த மேடையிலேயே பி.டி. செல்வகுமார் ஊக்கத் தொகையும், கேடயமும் வழங்கி பாராட்டினார்.

மேடையில் பரிசு வழங்கி பி.டி. செல்வக்குமார் பேசியதாவது: ஏழை மாணவர்களுக்கு கல்வி ஒரு தடையாக இருக்கக் கூடாது, இந்த சிறுவயது மாணவனுடைய திறமையை உலகறிய செய்ய வேண்டும். அவனுடைய திறன் மேம்பட வேண்டும் என்பதற்காக இந்த பரிசு தொகையை வழங்கினேன்.

அதேபோல இங்கு ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு ஒரு பொதுநலத்தோடு இப்படி ஒரு பிரமாண்டமான விழாவை ஏற்பாடு செய்து பரிசுகள் வழங்கி திறமையாளர்களை அங்கீகாரம் செய்கிறார்கள். நிச்சயமாக இதை பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவ சமுதாயத்திற்கு ஒரே ஒரு வேண்டுகோள் அதாவது இரவு 7:00 மணிக்கு மேல் நீங்கள் யாரிடமும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளாதீர்கள். குறிப்பாக பெண்கள் பல்வேறு ஆபத்துகளும், திருமணத்திற்கு பிறகு பல சிக்கல்களும் இதனால் ஏற்படுகிறது. எனவே செல்போன் என்ற எமனை நீங்களே கையில் வைத்துக் கொண்டு அழிவை தேடி கொள்ளாதீர்கள்.

அதேபோல மாணவ செல்வங்களே நடிகர்கள் பின்னால் சென்று உங்கள் வாழ்க்கையை பாழாக்கி கொள்ளாதீர்கள். உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் தான் உள்ளது. உடல் ஆரோக்கியம் ரொம்ப முக்கியம். அதிகாலை எழுந்து உடற்பயிற்சியும் நடை பயணமும் செய்தால் மனநலமும் உடல் நலமும் வளர்ச்சி அடையும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கலப்பை மக்கள் இயக்கம் மாவட்ட தலைவர் வக்கீல் பாலகிருஷ்ணன், தலைமை ஆசிரியர் லிங்கேசன், நற்பணி மன்ற தலைவர் ராதாகிருஷ்ணன், விழா தலைவரும் மன்ற அமைப்பாளருமான செல்ல கண்ணன், துணை அமைப்பாளர் கண்ணன், வக்கீல் சரவணன், முன்னாள் ஊராட்சிதலைவர் கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னையில் நடைபெற்ற 76 வது குடியரசு தின விழாவில் குற்றத் தடுப்பு நிகழ்வில் சிறப்பாக செயல்பட்டு சிறந்த காவல் நிலையத்திற்கான முதல் இடத்தை பிடித்து தமிழ்நாடு அரசின் முதல்வர் கோப்பையை மதுரை மாவட்டம் எஸ் எஸ் காலனி காவல் நிலையம் பெற்றது. முதலமைச்சர் கோப்பையை பெற்ற எஸ்.எஸ்.காலனி காவல்நிலைய ஆய்வாளர் காசி க்கு மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் வாழ்த்துக்களை தெரிவித்து பாராட்டினார்.

# 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு மேடவாக்கம் ஊராட்சியில் அன்னதானம்

மேடவாக்கம் ஜன29

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியில் 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர்மான ப.ரவி தலைமையில் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்வில் மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சிவபூஷணம் ரவி மேடவாக்கம் ஊராட்சி பள்ளிகளில் தேசிய கொடியை ஏற்றி வைத்து பள்ளி மாணவ, மாணவிகள், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஊராட்சி பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வெற்றிக் கோப்பை பரிசுகளாக வழங்கினார். உடன் ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எஸ். கோபு, ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் இ.பி. நடராஜன்,எச்.டி. போஸ், ரவி கேசவன், ஜி. கோவிந்த ராஜுலு, அம்மு கிருஷ்ண மூர்த்தி, கௌரி முருகன், புவனேஸ்வரி மகேஷ், குணசுந்தரி மோகன் மற்றும் ராமையா நகர் எஸ். சுரேஷ், ஏ.வி.எம்.முருகன், பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டுசிறப்பித்தனர்.

# 30 வயது இளைஞருக்கு மூளையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அகற்றி வலிப்பு நோயிலிருந்து நிரந்தரமாக மீட்பு

மதுரை: ஜன 29

பல ஆண்டுகளாக கை கால் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு மருந்துகளின் மூலம் சிகிச்சை எடுத்தும் குணம் அடையாத 30 வயதான ஒரு இளைஞருக்கு மதுரை மீனாட்சி பல்நோக்கு மருத்துவமனையில் டெம்பரல் லோபெக்டாமி வித் அமிக்டாலா ஹிப்பொகாம்பெக்டோமி என்ற செயல்முறையின் மூலம் நோயாளியின் வலி புத்தகங் களுக்கு காரணமான மூளை திசுக்கள் வெற்றிகரமாக அகற்றபட்டுள்ளது.




மருத்துவமனையின் நரம்பியல் துறை தலைவர் விஜய் ஆனந்த் முதுநிலை நிபுனர் நரேந்திரன் நரம்பில் அறுவை சிகிச்சை துறையின் தலைவர் செல்வம் முத்துக்குமரன் மற்றும் முதல் நிலை நிபுணர் செந்தில் ஆகியோர் கொண்ட மருத்துவ குழு சிகிச்சையைவெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

மேலும் மருத்துவ குழு கூறு கையில் வீடியோ இ இ ஜி உட்பட நவீன சாதனங்களின் தொகுப்பு நோயாளியின் மூலையில் வலிப்பு நோயின் அமைவிடத்தை துல்லியமாக கண்டறியசிகிச்சை முறைஉதவி கரமாக இருந்துள்ளது,அச்சம் மகிழ்ச்சி முதலியவைகளை உணர்த்தும் அமிக் டாலா டெம்போரல் லோப்கள் மற்றும் இப்போகாம்பஸ் போன்ற நோயாளியின் பாதிக்கப்பட்ட மூளைப்பகுதிகளை இந்த அறுவைசிகிச்சை அகற்றியதால் இனிமேல் வலிப்பு நோய்க்கான இடர்வாய்ப்பை திறம்பட நீக்கி இருக்கிறது.

மேலும் தென் தமிழகத்தில் இத்தகைய சிகிச்சை மேற் கொள்வது மிகவும் அரிதா னது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மீனாட்சி பல்நோக்கு மருத்துவமனை மேம்பட்ட மூளை நரம்பு அறிவியல் தொழில்நுட்பம் சாதனங்கள் மற்றும் கை கால் வலிப்புக்கான அறிவிப்பு சிகிச்சையில் சிறப்பு நிபுணத்துவம் கொண்ட மருத் துவர்கள் குழு ஆகியவற்றை கொண்டு திறம்பட இயங்குவது சிறந்த மருத்துவ மனைகளில் ஒன்றாகும் என்றனர்.




மதுரை மாவட்டத்தில் ஏ. ஆர் மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் வேளாண்மைத் துறையில் சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா இ.ஆ.ப சான்றிதழும் கேடயமும் வழங்கினார்.உடன் வேளாண்மை இணை இயக்குனர் சுப்புராஜ்,மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சாந்தி ,தோட்டக்கலை இனண இயக்குனர் பிரபா , மெர்சிஜெயராணி துணை இயக்குனர் வேளாண் வணிகம், செயலாளர் வேளாண் விற்பனைக்குழு அதிகாரிகள் மற்றும் விருது பெற்ற அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.


# போடிநாயக்கனூர் கோழிக்கடை வியாபாரிகள் சங்கம் திறப்பு விழா



போடி, ஜன.29

தேனி மாவட்டம் போடிநாயக் கனூர் தாலுகா கோழிக்கடை வியாபாரிகள் சங்கம் திறப்பு விழா அன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் வர்த்தக சங்க திருமண மண்ட பத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் வர்த்தக சங்கத் தலைவர், செயலாளர், பொறுப்பாளர்கள் ஆகியோர் குத்து விளக்கேற்றி விழாவினை துவக்கினர். இத்திறப்பு விழாவில் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. சங்கத் தின் தலைவர் . சிவா செந்தில் ராஜா, துணைத் தலைவர் . ஜான் பீட்டர், செயலாளர் . இப்ராஹிம் ஷாஜி, துணைச் செயலாளர், ராஜசேகர், துணைச் செயலாளர்.ஜெய பிரகாஷ், பொருளார் . நாகராஜ் மற்றும் கோழிக்கடை நிர்வாகிகளும் மற்றும் செயற் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடு ஆளுநரை தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் புத்தகம் கொடுத்து வரவேற்றார்.




கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராம்புதூர் டாஸ்மாக் குடோனில் பணிபுரியும் டிரைவர்,கிளீனர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் நேற்று திடீரென பணி புறக்கணித்து வெளியேறியதால் பரபரப்புதங்களுக்கு பணி நேரத்தை முன்கூட்டியே வழங்க வேண்டும்,பொழுது சாய்ந்த,மாலை நேரங்களில் பணி வழங்குவதால், டாஸ்மாக் கடைகளில் மதுபான வகைகளை கொண்டு செல்கின்ற போது அங்கு வரும் போதை ஆசாமிகளில் தங்களுக்கு இடையூறு ஏற்படுகிறது இதனால் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்ற கோரிக்கையை முன் வைத்து திடீர் போராட்டம் நடைபெற்றது..



மதுரை மாவட்டம் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சாமநத்தம் ஊராட்சியில் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு கிராம சபை நடைபெற்றது. இக்கிராமசபை கூட்டங்களில் வரவு செலவு தணிக்கை அறிக்கை ஜல்ஜீவன் திட்டம் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் கலைஞரின் கனவுஇல்லம் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி, பேராட்சி பிரேமா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லீலாதேவி ஊராட்சி செயலர் கண்ணன் தூய்மை பணியாளர்கள். வேளாண் அலுவலர்கள்.கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம்

மானாமதுரை போக்குவரத்து காவல்துறை

போக்குவரத்து விதிமீறலுக்கான

திருத்தப்பட்ட அபராதம் பற்றிய விழிப்புணர்வு

| | போக்குவரத்து விதிமீறல் | 1st Offence முதல் முறை | 2nd Offence இரண்டாவது முறை |
|---|---|---|---|
| 1. | ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டுதல் | ரூ 1000/- | ரூ 1000/- |
| 2. | இருசக்கர வாகனத்தின் பின் இருக்கையில் ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டுதல் | ரூ 1000/- | |
| 3. | இருக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணித்தல் | ரூ 1000/- | |
| 4. | ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டுதல் | ரூ 5000/- | |
| 5. | வாகனம் இன்சூரன்ஸ் இல்லாமல் ஓட்டுதல் | ரூ 2000/- | ரூ 4000/- |
| 6. | செல்போன் பேசியவாறு வாகனம் ஓட்டுதல் | ரூ 1000/- | ரூ 10,000/- |
| 7. | சீட்பெல்ட் அணியாமல் வாகனம் ஓட்டுதல் | ரூ 1000/- | |
| 8. | சரக்கு வாகனத்தில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல் | ரூ 500/- | ரூ 1500/- |
| 9. | போக்குவரத்துக்கு இடையூராக வாகனத்தை அபாயகரமாக சாலையில் நிறுத்தி வைத்தல் | ரூ 500/- | ரூ 1500/- |
| 10. | No Entry / Wrong Side-ல் வாகனத்தை ஓட்டுதல் | ரூ 500/- | ரூ 1500/- |
| 11. | No Parking - ல் வாகனம் நிறுத்துதல் | ரூ 500/- | ரூ 1500/- |
| 12. | அதிவேகமாக வாகனம் ஓட்டுதல் | | |
| | 1. இருசக்கர/ LMV வாகனத்திற்கு | ரூ 1000/- | |
| | 2. கனரக சரக்கு வாகனம் / பேருந்திற்கு | ரூ 2000/- | |
| 13. | சரக்கு வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட எடையை விட அதிக எடை ஏற்றுதல் | ரூ 20000/- + 2000 (டன்னுக்கு) | |
| 14. | குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் | ரூ 10000/- | |
| 15. | Fancy Number Plate / நம்பர் இல்லாமல் ஓட்டுதல் | ரூ 500/- | |
| 16. | ஒலி எழுப்ப தடை விதிக்கப்பட்ட இடங்களில் ஒலி எழுப்புதல் | ரூ 1000/- | ரூ 2000/- |
| 17. | காவல்துறையினரின் உத்தரவை மதிக்காமல் செல்லுதல் | ரூ 2000/- | |
| 18. | அபாயகரமாக வாகனம் ஓட்டுதல் | ரூ 1000/- | ரூ 10,000/- |
| 19. | அனுமதி இல்லாமல் வாகனத்தை ரேசிங் ஓட்டுதல் | ரூ 5000/- | ரூ 10,000/- |
| 20. | அனுமதி சான்றுக்கு மாறாக / இல்லாமல் ஓட்டுதல் | ரூ 10000/- | |
| 21. | ஆம்புலன்ஸ் / தீயணைப்பு வாகனத்திற்கு வழிவிடாமல் செல்லுதல் | ரூ 10000/- | |

சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு

தலை கவசம் உயிர் கவசம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நேற்று முன்தினம் சாலை விதிகளை மதித்து வாகனம் ஓட்டுபவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. அதேபோல விநியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரங்களில் போக்குவரத்து விதி மீறல்களுக்கான திருத்தப்பட்ட அபராதத் தொகை பற்றிய விவரங்கள் 21 போக்குவரத்து விதி மீறல்கள் உள்ளடக்கியிருந்தது. சாலை விதிகளை மதித்து வாகனங்களை இயக்க வேண்டும் என மானாமதுரை போக்குவரத்து காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சுற்றுவட்டார கிராம பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியாத நிலையில் அரசு மருத்துவமனைக்கு வருகின்றனர்.இங்கு மாலை 5:00 மணிக்கு மேல் டாக்டர்கள் இல்லாததால் செவிலியர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.பொதுமக்களின் நலன் கருதி உடனடியாக அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள டாக்டர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் கோரிக்கை எழுந்துள்ளது.



கன்னியாகுமரி மாவட்டம் புத்தளம் பேரூராட்சிக்குட்பட்ட 1வது வார்டு அரியபெருமாள் விளையில்,பேரூராட்சி நிர்வாகத்தின் அனுமதியின்றி முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதால், பேரூராட்சியின் வேறு பகுதியில் உள்ள இடங்களுக்கு குடிநீர் தடையால் பொதுமக்கள் அவதிஇதுகுறித்து விசாரிக்கச் சென்ற பேரூராட்சி செயல் அலுவலர், பேரூராட்சி தலைவர்,போலீசார் இடையே அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு.



கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளிச்சந்தை பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.




கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி பேரூராட்சிக்கு உட்பட்ட ஒற்றையால் விளை அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா நிகழ்ச்சியானது பள்ளி தலைமை ஆசிரியர் செல்வி சுஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒற்றையால் விளை ஊர் தலைவர் பாலசுந்தரம், முன்னாள் மாணவர்கள் சங்க தலைவர் எஸ் அன்பழகன், ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள், மாணவ மாணவியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்... நிகழ்ச்சியின் நிறைவில் சிறப்பாக செயல்பட்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்க தொகையும் பரிசும் வழங்கப்பட்டது...

# சிவகங்கையில் போக்குவரத்து போலீசார் சாலை பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு

சிவகங்கை ஜன29

சிவகங்கை அரண்மனை வாசலில் சிவகங்கை போக்குவரத்து போலீசார் சார்பில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக போக்குவரத்து துறை சார்பு ஆய்வாளர் அழகுராணி தலை மையில் மலர் கொத்து கொடுத்து கௌரவித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

போக்குவரத்து துறை காவலர்கள் இணைந்து இப்பணியை மேற்கொண்டனர்.

டுவீலர்களை ஓட்டிச் செல்லும் போது, ‘ஹெல்மெட்’ அணிவதன் அவசியம் குறித்தும், போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றி இருசக்கர வாகன ஓட்டிகள் ஆட்டோ டிரைவர்கள், மக்கள் நடந்து கொள்வது பற்றிய விழிப்புணர்வு குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. விதிமுறைகளை பின்பற்றிய டுவீலரில் ஹெல்மெட் அணிந்து வந்த நபர்களை பாராட்டி மலர் கொத்து கொடுத்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர். சிவகங்கை போக்குவரத்து போலீசார், தலைமை காவலர் கோபாலகிருஷ்ணன் ஜெயலட்சுமி சுப்புலட்சுமி நாகராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.





சிவகங்கை மாவட்டம், பூலாங்குறிச்சி அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் அதுவரை யுஜிசி பரிந்துரைத்த ஊதியம் ரூபாய் 57,500 ரூபாய் வழங்க வேண்டும் உள்ளிட்ட இரு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி முனைவர் ரமேஷ் தலைமையில் வாயில் முழக்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் அவசியம் குறித்து முனைவர் பரமானந்தம் விளக்கவுரை ஆற்றினார், முன்னதாக முனைவர் கவிதா வரவேற்புரையாற்றினார் முனைவர் முருகேசன் நன்றி தெரிவித்தார்.

# சிவகங்கை வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிவகை ஏற்படுத்திய முதலமைச்சருக்கு நன்றி

சிவகங்கை, ஜன29



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகள் பயன் பெறும் வகையில் வேளாண் சார்ந்த திட்டங்களை, பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, அத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, விவசாயிகளை பயன்பெறச் செய்து வருகிறார்கள். மேலும், விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசாக திகழ்ந்து வரும் தமிழக அரசு, விவசாயிகள் சாகுபடி செய்யும், உற்பத்திப் பொருட்களை, சந்தைப்படுத்துவதற்கும், விவசாயிகளை வணிகர்களாக உருவெடுக்கின்ற வகையில், பல்வேறு தொழில்நுட்ப ரீதியான கருத்துக்கள் மற்றும் பயிற்சிகளை சிறப்பாக வழங்கி வருகிறது.

குறிப்பாக, வேளாண் பெருங்குடி மக்கள் தங்களை குழுவாக ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி, சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தற்போது 10 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன்மூலம், விவசாயிகள் உற்பத்திப் பொருட்களை மதிப்புக் கூட்டுப் பொருட்களாக மாற்றி, தாங்களும் வணிகர்களாக உருவெடுக்கும் பொருட்டு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வேளாண் வணிகத்துறையின் சார்பில், 1,000 விவசாயிகள் ஒன்றிணைந்து, ஒரு உழவர் உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி, அதில், ஒவ்வொரு விவசாயியும் தலா ரூ.1,000/ முதலீடு செய்தால், அத்தொகையுடன் அக்குழுவிற்கு தமிழக அரசின் மூலமாக, பங்கீட்டுத் தொகை மற்றும் ஒன்றிய அரசின் பங்கீட்டுத் தொகையும் வழங்கப் பட்டு, விவசாயிகளின் மதிப்புக் கூட்டுப் பொருட்களை சந்தைப்படுத்தி அவர்களை பயன்பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ், தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வணிக கூட்டமைப்பு நிதி உதவியின் மூலம் திருப்பத்தூர் வட்டாரத்தில் உள்ள செம்பகம் பேட்டை கிராமத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும், ஸ்ரீ ஆவுடைய விநாயகர் கூட்டுப்பண்ணை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் கொப்பரை, நெல் மற்றும் நிலக்கடலை கொள்முதல் மையத்தின் பயன்கள் குறித்து, பயனாளர்கள் தெரிவிக்கையில்,

ஸ்ரீ ஆவுடைய விநாயகர் கூட்டுப்பண்ணை உழவர் உற்பத்தியாளர் நிறுவனமானது, சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட திருப்பத்தூர், சிங்கம்புணரி மற்றும் எஸ்.புதூர் வட்டாரங்களில் உள்ள 1,000 விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்டு, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் தொடங்கப்பட்டு, கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாக திருப்பத்தூர் வட்டாரத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு,

அவ்வட்டார பகுதிகளைச் சார்ந்த விவசாயிகளின் விளைப் பொருட்களை மதிப்புகூட்டி விற்பனை செய்வதற்கும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதன் மூலம் விவசாயிகளும் தங்களது விளைப்பொருட்களை எவ்வித சிரமுமின்றி உரிய விலையில் விற்பனை செய்து, இலாபம் ஈட்டி வருவதாக தெரிவித்துள்ளனர்.

அவ்வாறாக, மேற்கொள்ளப் பட்டுள்ள வணிகத்தின் மூலம் 2021_22ஆம் ஆண்டிற்கு ரூ12.03 இலட்சமும், 2022 23 ஆம் ஆண்டிற்கு ரூ.55.0 இலட்சமும், 202324 ஆம் ஆண்டிற்கு ரூ.03.05 கோடி வணிகமும் மேற்கொள்ளப்பட்டு, விற்ற முதல் (Turnover) ஈட்டியுள்ளது.

அதேபோன்று, 202425 ஆம் ஆண்டில் மட்டும் கொப்பரை கொள்முதல், நிலக்கடலை, நெல் கொள்முதல், தேங்காய் மட்டை, தேங்காய் நார் மற்றும் மஞ்சி ஆகியவைகளை நேரடியாக எங்களை போன்ற விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, விற்பனை செய்ததன் மூலம் ரூ.5.2 கோடி வரை விற்று முதல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலம் விளைப் பொருட்களை சந்தைபடுத்துவது மட்டுமன்றி, விவசாயம் சாராத நபர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. குறிப்பாக, வேளாண்மை சார்ந்த பயிற்சிகள் மற்றும் கூட்டங்களில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மகளிர் உறுப்பினர்களுக்கு சிறுதானிய மதிப்பு கூட்டல் குறித்த பயிற்சிகளும் அளிக்கப் பட்டு வருகிறது. இதன் மூலம், விவசாயிகள் தங்களது நிலத்தில் விளையும் சிறுதானியங்களைக் கொண்டு தங்களது குடும்ப தேவைகளுக்கு மட்டுமன்றி, விற்பனை செய்தும் வணிகம் மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறாக, உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் விதைகளை நல்ல லாபகரமான விலைக்கு விற்கப் பட்டு, 202324 ஆம் ஆண்டு ரூ.91 இலட்சம் வரை விற்று முதல் (Turnover) ஈட்டப்பட்டுள்ளதும் பெருமைக்குரியதாகும்.

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் வேளாண் சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோருக்கு, சிறுதானிய லட்டுகள் மற்றும் சத்துமாவு பானம் போன்றவைகளும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மூலம் வழங்கப்படுகிறது.

அதேபோன்று, தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் மூலம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தினந்தோறும் விற்பனையும் செய்யப் பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகள், விவசாய தொழில்களில் மட்டும் ஈடுபடுவதின்றி, சிறுதானியங்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்யும் வணிகத்திலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, இலாபம் அடைந்து வருவதாகவும், தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை நீலவானம் உழவர் உற்பத்தியாளர் நிறுவன பயனாளர்கள் தெரிவித்தனர்.

தொகுப்பு

மு.ராஜசெல்வன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை மாவட்டம்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக சிவகங்கை மாவட்ட குழந்தைகள் அறிவியல் மாநாடு

சிவகங்கை ஜன29




சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக 32 ஆவது குழந்தைகள் அறிவியல் மாநாடு மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்திலுள்ள ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித்துறை கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் முத்துலட்சுமி சிவகங்கை கிளை தலைவர் மணவாளன் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் ஆரோக்கிய சாமி வரவேற்புரை ஆற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் அறிமுக உரையாற்றினார். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் முருகன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். நீடித்த பாதுகாப்புக்கான நீர் மேலாண்மை என்ற கருப்பொருளில் இளநிலை தமிழ் பிரிவில் 30 ஆய்வுக் கட்டுரைகள் இளநிலை ஆங்கிலப் பிரிவில் 10 ஆய்வுக்கட்டுரைகள் முதுநிலை இளநிலை பிரிவில் 40 ஆய்வுக் கட்டுரைகள் முதுநிலை ஆங்கிலப் பிரிவில் 15 ஆய்வுக் கட்டுரைகள் என 95 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டன. குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவற்கொடியோன் பிப்ரவரி 1ஆம் தேதி தென்காசியில் நடைபெறவிருக்கும் மண்டல மாநாட்டிற்கு தேர்ந்தெடுக்கப் பட்ட ஆய்வு கட்டுரைகளை அறிவித்தார். மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கநிலை) ஜோதிலட்சுமி குழந்தை விஞ்ஞானிகளுக்கு கேடயமும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி சிறப்புரையாற்றினார். சிவகங்கை நகர்மன்றத் தலைவர் துரை ஆனந்த் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் புத்தகங்களும் பரிசாக வழங்கினார். மாவட்டப் பொருளாளர் பிரபு சிவகங்கை கிளைச் செயலாளர் அனந்தகிருஷ்ணன் சிவகங்கை கிளைப் பொருளாளர் ராஜசரவணன் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டக் கல்வி ஒருங்கிணைப்பாளர் சாஸ்தா சுந்தரம் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட துணைச் செயலாளர் ராசு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். வானவில் மன்ற கருத்தாளர் லலிதா ஆய்வு கட்டுரை பதிவுகளை மேற்கொண்டார்.

வழிகாட்டி ஆசிரியர்களும் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தார்கள்.

# மானாமதுரை ஒ வெ செ மேல்நிலைப் பள்ளியில் காவல்துறை சார்பில் விழிப்புணர்வு முகாம்





மானாமதுரை ஜன29

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஓ வெ செ மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து மாணவர்களுக்கிடையே ஒழுங்கற்ற நிலை நிலவி வருவதால் மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவீந்திரன் தலைமையில் மாணவர்களுக்கு பள்ளியில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் மாணவர்களுக்கு ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமில் மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவீந்திரன் காவல் உதவி ஆய்வாளர் அகிலன் மார்ட்டின் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் தலைமை தாங்கினார். மாணவர்கள் பள்ளிக்கு சரியான நேரத்தில் வர வேண்டும் பள்ளி வளாகத்திற்குள் செல்போன்கள் மற்றும் போதை பொருள்கள் ஜாதி ரீதியான கயிறுகள் கட்டுவதை தவிர்க்க வேண்டும் என பல்வேறு அறிவுரைகளை வழங்கினர்.

மேலும் ஒவெசெ மேல்நிலைப் பள்ளி நூற்றாண்டுகளை கடந்து பல்வேறு உயர் அதிகாரிகளையும் பல்வேறு அரசியல் தலைவர்களையும் உருவாக்கிய பள்ளி என்பதை மாணவர்கள் ஒழுக்கமான முறையில் நடந்து கொண்டு பள்ளியின் நன் மதிப்பு உயர்த்திக் காட்ட வேண்டும் என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார்.

இதில் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி . ஜனவரி 29



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (27.01.2025) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 263 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, பொது மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டு மனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 263 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

முன்னதாக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.11,445/ மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள் 1 நபருக்கும், தலா ரூ.16,199/ மதிப்பிலான ஸ்மார்ட் போன் 16 நபர்களுக்கு என மொத்தம் 17 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,70,629/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முத்துமாதவன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சாந்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர்.வெங்கடாச்சலம், உதவி ஆணையர் (கலால்) .ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பாண்டியன் சரஸ்வதி யாதவ் பொறியியல் கல்லூரியில் குடியரசு தின விழா டேக்வாண்டா போட்டி

மானாமதுரை, ஜன.29



பாண்டியன் சரஸ்வதி யாதவ் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பள்ளிக் கல்வித்துறை சார்பில் பாரதியார் தினம் மற்றும் குடியரசுதின விழா டேக்வாண்டா 2024 2025ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளை முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் நேற்று தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார் டேக்வாண்டோ போட்டியின் மாநில ஒருங்கிணைப்பாளர் செல்வமணி பாண்டியன் சரஸ்வதி பொறியியல் கல்லூரி இயக்குனர் வரதராஜன் திருபுவனம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கடம்பசாமி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் ஜோதிலட்சுமி அவர்கள் மாவட்ட உயர் கல்வி அலுவலர் கார்த்திகேயன் ராமநாதபுரம் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் வசந்தி தூத்துக்குடி மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநாகராட்சி சார்பாக 10 க்கு மேற்பட்ட பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை கட்டபட்டு வரும் நிலையில் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்ற பேருந்து நிறுத்தமிடத்தில் கட்டபட்டு வரும் முன்மாதிரி பயணிகள் நிழற்குடை கட்டுமான பணிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் ஆய்வு மேற்கொண்டார் உடன் மண்டலத் தலைவர் ஜவஹர் மாவட்ட வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஜெயக்குமார் அரசு தரப்பு வழக்கறிஞர் வீனஸ்ராஜ் மூத்த வழக்கறிஞர் .பாலஜனாதிபதி மாமன்ற உறுப்பினர்கள் .விஜிலா ஜஸ்டஸ்.நவீன்குமார் உதவி செயற் பொறியாளர் ரகுராம்,இளநிலை பொறியாளர் பாஸ்கர்,பகுதி செயலாளர் . ஷேக் மீரான், மாநகர துணை செயலாளர்.வேல்முருகன்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், வட்ட செயலாளர்கள் சுரேஷ் ராமகிருஷ்ணன் மற்றும் தி மு க நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் உடன் இருந்தனர் .

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161